**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**CC.No.216/2022**

**Deposition of PW-9** **LW-11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. மலைச்சாமி | **Age** | : | 38/2026 |
| **Father's Name** | : | திரு. பாலமுருகன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | குள்ளப்பகவுண்டன்பட்டி | **Calling** | : | முதல்நிலை காவலர் |
| **Taluk** | : | உத்தமபாளையம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **28/07/2026.**

எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் சின்னமனூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.6.2022 ஆம் தேதி போடி தாலுகா காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்தபோது போடி தாலுகா காவல் நிலைய குற்ற எண் 173/2022 இந்திய தண்டனைச் சட்டம் 304A கீழ் வழக்கில் இறந்துபோன கம்பத்தை சேர்ந்த பாலு என்ற பாலமுருகனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி காவல் ஆய்வாளர் என்னிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அதன்பிறகு நான் காவல் ஆய்வாளருடன் தேனி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்த பாலமுருகனின் உடலை காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்தார்.

2) பிரேத விசாரணையின்போது உடன் இருந்தேன். அதன்பிறகு வேண்டுகோள் கடிதத்தை தேனி க.விலக்கு மருத்துவரிடம் கொடுத்து இறந்த நபரின் உடலை

அங்கமச்ச அடையாளம் காண்பித்தேன். அதன்பிறகு பிரேத பரிசோதனை முடித்து இறந்த நபரின் உடலை அவரது உறவினர் வசம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி, குறுக்குவிசாரணை இல்லை எனத் தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.28 16:16:57 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**